வரவு செலவுத்திட்டம் 2024: ஒவ்வொரு சந்ததிக்குமான நியாயத்தன்மை.

சித்திரை(ஏப்ரல்) 16 ,2024 ஒட்டாவா ,ஒன்ராறியோ கனடா
நிதித்திணைக்களம்

துணைப்பிரதமமந்திரியும் ,நிதிஅமைச்சருமான மேன்மைதங்கிய கிறிஸ்டியா பிறீலாண்ட் (Chrystia Freeland) அவர்கள் இன்று 2024 ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தினை வெளியிட்டார் : ஒவ்வொரு சந்ததிக்குமான நியாயத்தன்மை.

ஒவ்வொரு சந்ததிக்கும் முன் இருந்த சந்ததியினரைவிட நன்றாக இருக்கக்கூடிய முறையில் கனடாவினைக்கட்டியெழுப்புவதற்கான ஒரு திட்டம் ,இதன் மூலம் இளம் சந்ததியின் முன்னோக்கிய நகர்வு, அவர்களின் கடின உழைப்புக்கான வெகுமதி, அவர்களுக்குச் சொந்தமானதாக ஒரு வீட்டினை வாங்குவதற்கு அல்லது வாடகைக்குப் பெற்றுக்கொள்ளவும் - ஒவ்வொருவருக்கும் ஒரு நடுத்தர வாழ்க்கையிலும் வாழ்க்கைக்குரிய நியாயமான நல்ல ஒரு சந்தர்ப்பம் கிடைக்கப்பெறுதல்.+

முதலாவதாக, 2024 வரவு செலவுத்திட்டமானது கூடுதலான வீடுகளைக் கட்டுவதற்கு ஒரு காத்திரமான நடவடிக்கை எடுத்தல்: ஏனெனில் வீட்டு விலைகளையும் , வாடகையையும் கட்டுபடியானதாக வைத்திருக்க மிகவும் சிறந்த வழி வீடுகளின் தொகையை அதிகரிப்பதும் அத்துடன் அதனை விரைவாகச் செய்தலும் ஆகும் .2024 வரவு செலவுத்திட்டமானது 2031 அளவில் 3.87 மில்லியன் புதிய வீடுகளை அமைப்பதற்குரிய உத்திகளுக்கான அடித்தள வரைபை இடுகின்றது. அதில் முக்கிய பங்குகளாக உள்ளடக்கப்படுபவை ஒரு புதிய வீட்டுத்திட்டத்திற்கான பொதுவாக உள்ள காணி (நிலம்) பற்றிய வெளியிடுதல் அத்துடன் கனடா வாடகைப் பாதுகாப்பு நிதியத்தினை உருவாக்குதல் ,கனடா அடமானக்கடன் சாசனத்தினை வலுப்படுத்துதல், மேலும் கனடாவிற்கான வாடகைக்குடியிருப்பாளர்களிற்குரிய உரிமைகளுக்கான ஒரு புதிய மசோதாவினை உருவாக்குதல்.

இரண்டாவதாக, 2024 வரவு செலவுத்திட்டமானது வாழ்க்கைக்குரிய செலவினைக் குறைப்பதாக அமையும். கனேடியர்களுக்கான நாளாந்த செலவினைக் குறைப்பதற்காக 2024 வரவு செலவுத்திட்டத்தில் கனடா அரசாங்கத்தின் வேலை முன்னெடுப்பாக, அரசாங்கத்தின் உருமாற்ற விரிவாக்கத்திட்டத்தினைக் கட்டியெழுப்பும் பொருட்டு கனடாவின்

சமூகப்பாதுகாப்பு வலையமைப்பிலுள்ள - $10 டொலர் ஒரு நாளுக்குரிய குழந்தை பராமரிப்பு, காப்புறுதியற்ற கனேடியர்களுக்கான பல் பராமரிப்பு, தேசிய ரீதியாக ஒட்டுமொத்தமான மருந்துக்கவனிப்பு ( Pharmacare) போன்றன கட்டியெழுப்பப்படும். இவற்றிற்குள் மளிகைப் பொருட்களின் விலையில் ஒரு உறுதித்தன்மையை ஏற்படுத்துதல், நியாயமான விலைகளைப் பேணும் பொருட்டு கண்டபடி விற்பனை செய்வோர் மீது கடும்நடவடிக்கை எடுத்தல், வங்கிக்காக  செலவிடும் தொகையினைக் குறைத்தல். 2024 வரவு செலவுத்திட்டமானது புதிய முதலீடுகளுக்கான உருமாற்றத்தினைக் (புதிய வடிவங்களைக்) கொண்டுள்ளது அவற்றிலே தேசிய ரீதியில் (மட்டத்தில்) பாடசாலைகளுக்கான உணவுத்திட்டம், மற்றும் கனடா குறைபாடுள்ள வர்களுக்கான நலத்திட்டமும் உள்ளடங்கும்.

மூன்றாவதாக , 2024 வரவு செலவுத்திட்டமானது பொருளாதார வளர்ச்சியினைக் காண்பதன் மூலம் அப்பொருளாதாரம் ஒரு வழியில் அனைவரினாலும் பங்கிடப்படுவதாக அமையும்.

இத்திட்டமானது முதலீடுகளைக் கவருவதுடன்,அதிகரிப்பதாகவும், உற்பத்தியை அதிகரித்தல் , மாற்றத்தினை உண்டு பண்ணக்கூடிய வகையில் புதுவிதமான முயற்சிகளை ஊக்குவிப்பதன் மூலம் கூடிய ஊதியத்தைப் பெறக்கூடியதும், அர்த்தமுள்ளதுமான தொழில்களை உருவாக்கி கனடாவினை பொருளாதாரத்தில் முன்னிலையில் வைத்திருக்கலாம். இதன் மூலம் புதிய ஆதரவினை தொழில்முனைவோருக்கும், புதுமைகளை ஏற்படுத்தக்கூடியவர்களுக்கும் கூடிய அதிகாரங்களை வழங்கி அவர்களது எண்ணங்கள் இங்கே கனடாவில் செயற்படக்கூடியதாக்குதல்.

இவை உள்ளடக்குவனவாக நிகர பூச்சிய பொருளாதாரத்தில் கூடிய முதலீடுகளைக் கவரும்பொருட்டு முக்கிய பொருளாதார முதலீட்டு வரி வரவுகளை வழங்குவதற்காகவும் அவற்றை விரிவுபடுத்துவதற்காகவும் செயற்கை நுண்ணறிவுத் துறையில்  கனடாவிற்குள்ள தலைமைத்துவத்தின் அனுகூலத்தினைப் பாதுகாத்துக்கொள்ளல், மேலும் வலுவூட்டும் அதிகரித்த ஆராய்ச்சி மானியங்களில் முதலீடு செய்வதன்மூலம் இளம் சந்ததியினருக்கு சிறந்த வேலைகளையும் புதிய வாய்ப்புக்களையும் வழங்குதல். இவ்வளர்ச்சியில் உள் நாட்டு மக்களுக்கான பங்கினை அவர்களுக்குப்பயன்படக்கூடிய வகையில் கிடைப்பதனை உறுதி செய்து கொள்ளல் .

2024 வரவு செலவுத்திட்டமானது மிக்க செல்வந்தர்களை அவர்களிற்கான நியாயமான வரியினை செலுத்தும் வண்ணம் கனடாவின் வரி முறைமை கேட்டுக்கொள்வதுடன் அதனைச் செய்யவும் வழிகோலும். - அவ்வாறு செய்வதன் மூலம் நாங்கள் ஒவ்வொரு சந்ததிக்குமான முதலீடுகளை வளம்பெறச் செய்யலாம், அத்துடன் எமக்குள்ள நிதிப்பொறுப்புக்களைப் புறக்கணித்து அடுத்தடுத்த தலைமுறைக்குக் கடன்களை விட்டுச் செல்வதானது நியாயமற்றதும் ,பொறுப்பற்ற ஒரு செயலாகவும் அமையும்.வரவு செலவுத்திட்டம் 2024 ஆனது ஒரு பொறுப்புள்ள பொருளாதாரத்திட்டமாக உள்ளது ,அது 2023 இலையுதிர்கால பொருளாதார அறிக்கையில் கோடிட்டுக்காட்டப்பட்ட நிதி நோக்கங்களை நிலைநிறுத்துவதாகவும் , கனடாவானது GDP ( மொத்த உள்நாட்டு உற்பத்தி ) க்கும் ,நிகரக்கடன் விகிதாசாரத்திற்குமிடையில் மிகவும் குறைந்த பற்றாக்குறையினைப் பேணி வருகின்ற ஒரு நாடாக G7 நாடுகளுக்குள்ளே காணப்படுகின்றது.

மேற்கோள்

“எமது அரசாங்கம் பதவிக்கு வந்தபோது நடுத்தர வர்க்கத்தினரை பலப்படுத்தியும், விரிவாக்கம் செய்கின்ற ஒரு சபதத்துடனேயே முதலில் வந்தது.அந்த வாக்குறுதியை ( உறுதிமொழியை) நிறைவு செய்யவே வறுமையைக் குறைத்துக் குறிப்பாக பிள்ளைகளுக்கும் ,மூத்தவர்களுக்கும் இதனைச் செய்ததுடன் , மில்லியன் கணக்கான் நல்ல வேலைகளை கனேடியர்களுக்கு உருவாக்கினோம். எமது வேலை முடிந்து விடவில்லை. 2024 வரவு செலவுத்திட்டமானது எமது குறியை (கவனத்தை)ப் புதுப்பித்து மில்லியன் கணக்கான நடுத்தர வர்க்கத்திலுள்ள இளம் கனேடியர்களுக்கான கதவினைத் திறக்க இவ்வரவு செலவுத்திட்டத்தின் மூலம் எமது கவனத்தைப் புதுப்பிக்க வேண்டியுள்ளது. கூடிய வீடுகளை அமைத்து வாழ்க்கைச்செலவினைக் குறைக்க நாம் உதவி செய்யவுள்ளோம். எமது பொருளாதாரத்தினை வளர்ச்சியடைய செய்து ஒவ்வொருவரினதும் வாழ்வினை உயர்த்துவோம். அது ஒவ்வொரு சந்ததிக்குமான நியாயத்தன்மையாகும்”.

“துணைப்பிரதமமந்திரியும், நிதிஅமைச்சருமான மேன்மைதங்கிய கிறிஸ்டியா பிறீலாண்ட் (Chrystia Freeland) அவர்கள்”. தொடர்புடைய விடயங்கள்.

.. * வரவு செலவுத்திட்டம் 2024: ஒவ்வொரு சந்ததிக்குமான நியாயத்தன்மையாகும்.

- வரவு செலவுத்திட்டம் 2024: துணைப்பிரதமமந்திரியும் ,நிதிஅமைச்சருமான கிறிஸ்டியா பிறீலாண்ட் (Chrystia Freeland) அவர்களின் உரை.
- வரவு செலவுத்திட்டம் 2024: முக்கிய நடவடிக்கைகள்
- (உத்தியோகபூர்வமல்லாத மொழிகளிலும் கிடைக்கும்)
- பின்னணியாளர்: கூடுதலான கட்டுபடியாகக்கூடிய வீடுகள்.
- பின்னணியாளர்: ஒரு பலமான சமூகப் பாதுகாப்பு வலையமைப்பு
- பின்னணியாளர்: இளம் கனேடியர்களுக்கான நியாயத்தன்மை
- பின்னணியாளர்: பொருளாதர வளர்ச்சியும் ,உற்பத்தியும்
- பின்னணியாளர்: சிறு வியாபாரத்தின் வளர்ச்சி.
- பின்னணியாளர்: பாதுகாப்பான,ஆரோக்கியமான சமூகங்கள்.
- பின்னணியாளர்: உள்நாட்டு மக்களுக்கான ஒரு நியாயமான எதிர்காலம்.
- பின்னணியாளர்: ஒவ்வொரு சந்ததிக்குமான நியாமான வரி
- வரவு செலவுத்திட்டம் 2024: கனடாவின் நுகர்வோர் சார்பான வங்கிக் கட்டமைப்பு

தொடர்புகளுக்கு

ஊடகத்தொடர்புக்கு:
Katherine Cuplinskas
Press Secretary and Senior Communications Advisor
Office of the Deputy Prime Minister and Minister of Finance
Katherine.cuplinskas@fin.gc.ca

ஊடக இணைப்புத்தொடர்புக்கு
கனடா நிதித் திணைக்களம்
mediare@fin.gc.ca
613-369-4000

பொதுவான விசாரணைகளுக்கு:
தொலைபேசி: 1-833-712-2292
TTY: 613-369-3230
E.Mail: financepublic-financepublique@fin.gc.ca